**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

தலைவர்
**தி. ஜெயசங்கர்**

பொதுச் செயலாளர்
**எஸ்.இராஜேந்திரன்**

பொருளாளர்
**எம்.வெங்கடேசன்**

நாள்: 10.01.2022

**பெறுநர்**

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : நிர்வாகம் - கேங்மேன் பணியாளர்களுக்கு இதர களப்பிரிவு பணியாளர்களுக்கு வழங்கிய சலுகையை வழங்க கோருதல் - தொடர்பாக**

மின்வாரியத்தில் புதியதாக உருவாக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட 9613 கேங்மேன் பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டத்தில் இணைத்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கீழ்கண்ட பிரச்சனைகளின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

★ கேங்மேன் பணியாளர்களுக்கு இரட்டிப்பு ஊதியம், பயணப்படி, உள்ளிட்ட இதர சலுகைகளையும் வழங்க வேண்டும்.

★ 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிறபிக்கப்பட்ட மின்வாரிய ஆணை எண் 5 நாள் 16.03.2018 அடிப்படையில் பயிற்சி காலம் மூன்று மாதங்கள் காலநிலை ஊதியத்துடன் என்பதை கேங்மேன் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

★ கேங்மேன் பணியில் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு உள்முக தேர்வில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

★ தற்போது மின் வட்டங்களில் ஏற்பட்டுள்ள காலிப்பணி இடங்களை கணக்கில் கொண்டு கேங்மேன் பணியாளர்களுக்கு சொந்த மாவட்டங்களுக்கு பணியமர்த்திட மாறுதல் உத்தரவு வழங்கிட வேண்டும்.

★ வாரியப்பணியின் போது விபத்து ஏற்பட்டால் அதற்கான மருத்துவ செலவினங்களை வாரியமே ஏற்கும் என்ற வாரிய ஆணை எண் 22 /2013 -ஐ கேங்மேன் பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்திட வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி !**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்